இநதவியாதி உடையவனுக்கு மூனறுநாள் காலைமாலை ஒரு காண்டியளவு விளககெணணெயாவது நெயயாவது கொடுககிறது. நாலாவதுநாள அபபியஙகஸ்நானஞ செய்து வைககிறது. தேகமிருநதால பிறகு வாநதிககுககொடுக கிறது.

பேதிக்குக்கொடுக்கிறகிரமம்.

கடுக்காயததூள (ச) பஙகு, சுககுததூள (உ) பஙகு, இந் துப்பு (க) பஙகு, இவைகளை வஸ்திரகாயஞ்செய்து அந்தத்

தூளில் தேகபலத்துக்குத்தக்கத (௩) விராகனெடைமுதல் (௯) விராகனெடைவரையில் வெந்நீரில் கலந்துகொடுக்கிறது.

(இரண்டாமுறை)

பேதிக்குக்கொடுக்கிறவிதம்.

சிவதைவேர் தூள்செய்து வஸ்திரகாயஞ்செய்த சூரணம் விராகனெடை (௫) சர்க்கரை விராகனெடை (௰) தநில பானசகஞ்செய்து மேற்சொல்லிய தூளைக்கலந்து பேதிக்குக் கொடுக்கிறது,

(மூன்றாமுறை.)

மணிபந்தசூரணம் பேதிக்குக்கொடுக்கிறவிதம்.

இந்துப்பு (௧) பாகம், சீரகம் (௨) பாகம், ஓமம் (௩) பாகம், சுக்கு (௪) பாகம், திப்பிலி (௫) பாகம், கடுக்காய்த்தோல் (௰௫) பாகம், இவைகளையெல்லாஞ்சேர்த்து சூரணஞ்செய்து அந்தச்சூரணத்தில் (௩) விராகனெடைமுதல் (௫) விராகனெடைவரையில் சலத்திலாகிலும், கோமூத்திரத்திலாகிலும், எருமைமூத்திரத்திலாகிலும் மோர்த்தெளிவிலாகிலும் கொடுக்கிறது இந்தப்பிரகாரம் பேதிக்குக் கா[illegible] கொடுக்கிறது. பேதியாகாதபட்சத்தில் மறுநாளும் கூடக் கொடுக்கிறது.

பாண்டுரோகத்துக்குக் காமாலைக்கு
எகுசெந்தூரங்கொடுக்கிற அனுபானம்.

எகுசெந்தூரம் புகதானுசாரம், வெங்காயச்சாறு விராகனெடை (௫) சாதிக்காய் விராகனெடை (௮) மாசிக்காய் விராகனெடை (௮) இந்த இரண்டையும் வெங்காயச்சாற்றி லரைத்து காண்டிக்காம்பு காய்வைத்து மேற்படி சாற்றை முறித்துக்கொடுக்கிறது. பாண்டுரோகம், காமாலை சொஸ்தமாகும்.

(இரண்டாமுறை)

பாண்டுரோகம் காமாலைக்கு அனுபானம்.

எகுசெந்தூரம் புகதானுசாரம், கீழாநெல்லிசமூலம், கையாந்தகரைசமூலம், வல்லாரைத்தழை இவைகளெல்லாம

வகையொன்றுக்கு விராகனெடை (௪) சுக்கு விராகனெடை (௨) கொத்துமல்லி விராகனெடை (௨) இவைகளை யெல்லாஞ்சேர்த்து அதில் இரண்டுசேர் தண்ணீர்விட்டு அரைக்கால்சேர் தண்ணீராகச் சுண்டினவுடன் இறக்கிக் கொண்டு அதில் (௫) விராகனெடை வெங்காயச்சார், சாதிக்காய் மாசிக்காய் இந்த இரண்டும் வகையொன்றுக்கு விராகனெடை (௧) இவையிரண்டும் வெங்காயச்சாற்றிலுரைத்து காண்டிக்காமலைக்காய்ச்சி சாற்றைப்பூரித்துக்கொண்டு மேற் சொல்லிய மருந்திற்கலந்து உள்ளுக்குக்கொடுக்கிறது. ...டுரோகம், காமாலை, இவைகள் சொஸ்தமாகும்.

...மமுறை.) பாண்டுரோசம், காமாலைக்கு ...செந்தூரம்கொடுக்க அனுபானம்.

எகுமேலு குருத்து மேலவிசாகச்செய்து இரும் ...சேர் (௯) பசுவின்நெய்யாச்சி (௮) சேர் இருப்புக்கிட்டான ... அதைப் பழுக்கக்காய்ச்சியிலுல அ... புசசி டிபிறபோட்டு ... முதற்குப்பிறகு கோமூத்திரத்தில் சுருக்குக்கொடுக்கிறது. ... எகுசெந்தூரம் யுக்தாலு அந்தச்சூரணம் விராகனெடை (௧) தேன் விராகனெடை (௧) சாரம், நெய் விராகனெடை (௧௦) இவைகளையெல்லாங்கலந்து மருந்துச் சாப்பிடப்போகிற சமயத்தில் மருந்தைச்சாப்பிட்டு உடனே சாப்பிடுகிறது.

இதனால் சொஸ்தமாகும் வியாதிகள்.

அக்கினிதீபனமாகும்; சாடராக்கினியும் விருத்தியாகும், காமாலை, பாண்டுரோகம், வீக்கம், இவைகள் சொஸ்தமாகும்.

வாதசம்பந்தம் கபசம்பந்தமாயிருக்கப்பட்ட பாண்டு, காமாலைக்கு எகுசெந்தூரங்கொடுக்க அனுபானம்.

முன்னைவேர், பாதிரி வில்வவேர், பிராணிகேகியகடனட. முன்னைவேர், பாதிரி வில்வவேர், கண்டங்கத்திரிவேர், முள் வேர், குமிழம்வேர், வாகைவேர், சிறுபூளைவேர், பூக்குத்திபூண்டுவேர், கண்டங்கத்திரிவேர், இவைகள் வகையொன்றுக்கு விராகனெடை (௧) சுக்கு, இவைகளை ஒன்றுபக்காய்வைத்து இடித்துக்கொண்டு அதில் இரண்டுசேர் தண்ணீர்விட்டு கால்சேர் தண்ணீராகச்சுண்

டினவுடன் இறக்கிக்கொண்டு அதில் எருக்செந்தூரம் யுக்தானுசாரம் தேன் விராகனெடை (1) சேர்த்துக்கொடுக்கிறது.

இதனால் சோபசமமாகும் வியாதிகள்.

வாதகபசம்பந்தமான சோபை, பாண்டுரோகம், அதிசாரம், கிராணி, விக்கல், சுவாசம், அரோசிகம், தொண்டைகரகரப்பு, தொண்டைவலி, ..., இந்த வியாதிகளெல்லாம் சோபசமனமாகும்.

பித்தசம்பந்தம் கபசம்பந்தமான பாண்டுரோகம் காமாலைக்கு யெகுசெந்தூரம் சேர்க்கும் அனுபானம்

கடுக்காய்த்தோல், நெல்லிமுள்ளித்தோல், தான்றிக்காய்த்தோல், திரிகடுகு, பிரண்டை, கோரைக்கிழங்கு, பேய்ப்புடல், ஆடாதோடை, தண்ணீர்விட்டான், சீந்தில், நிலவேம்பு, முதலியன வெவ்வேறாக விராகனெடை (1) அதில் இரண்டுசேர் தண்ணீர்விட்டு காய்ச்சி சோசக இறக்கிக்கொண்டு அதில் எருக்செந்தூரம் யுக்தானுசாரம், தேன் விராகனெடை (2) இந்த இரண்டும் கலந்து கொடுக்கிறது. பாண்டுரோகம், காமாலை, இவைகள் சொஸ்தமாகும்.

பாண்டுரோகம் காமாலைக்கு யெகுசோதூரம் சேர்க்கும் விசேஷ அனுபானம்.

எருக்செந்தூரம் யுக்தானுசாரம், சுத்த மண்டூரசூரணம் சரிபங்கு துக்கராத்திரிகடுகு அரைவிராகனெடைமுதல் ஒருவிராகனெடைவரையில் தேன் விராகனெடை (4) நெய் விராகனெடை (2) இவைகளையெல்லாம் கலந்துகொடுக்கிறது.

நவாயசசூரணத்தின் விபரம்

குதிரைலாடங்கொண்டுவந்து கொல்லன் உலையில் வைத்துக் காய்ச்சி முப்புனறுதடவை கல்லிலணியில் போரில் புளிச்சகாடியில் கொளுந்தணையில் கோலு திரித்தில பிரதியோகம் பிரதியேகமாக ... அந்த லாடத்தை அரப்பொடி செய்து அந்த அரப்பொடியை

முசல் இரத்தத்தில் கலந்து உருண்டைசெய்து உடனே உரித்த ஆட்டுத்தோலால் மூன்று புடையாகச்சுற்றி அந்த உருண்டையை ஏழுநாளளவு பள்ளத்தில்புதைத்துவைத்து நாலாநாளெடுத்து சலமவிட்டுக்கழுவி அந்த அரப்பொடியை இரும்புக்கடாயிற்போட்டு நெருப்பாகவறுத்துப்பிறகு அந்த அரப்பொடியை புதுச்சட்டியிற்போட்டு தெளிவு தண்ணீர்சேர்த்து நையிறைத்தால் அந்த சலத்துக்கு லோகசம்பந்தமாகும். பிறகு அந்தத்தண்ணீரை ஒருசட்டியிற் றெளியவைத்து வெய்யிலிற்காயவைக்கிறது. இந்த பிரகாரம் அந்த அரப்பொடித்தூளை சலத்தில் தேய்த்துத் தேய்த்த பொடி கரைசிறவரையில் கரைத்து வெய்யிலில் காயவைக்கிறது அந்தத்தண்ணீர் வெயிலில் காயவைத்தால் அடியில் இந்தத்தூளிருக்கும் இந்தத்தூள் ஒன்பது பலம், சுக்குப்பலம் (க) திப்பிலிப்பலம் (க) மிளகுபொடி பலம் (க) கடுக்காய்த்தூள் பலம் (க) தான்றிக்காய்த்தூள் பலம் (க) நெல்லிமுள்ளித்தூள் பலம் (க) கோரைக்கிழங்குத்தூள் பலம் (க) வாயுவிளங்கத்தூள் பலம் (க) கொடிவேலியின் பிராணந்தூள் பலம் (க) இவைகளையெல்லாம் கலந்து ஒரு பாத்திரத்தில் வைக்கிறது.

இந்த நவாயச்சூரணத்தினால் சொஸ்தமாகும் வியாதிகள்.

பாண்டுரோகம், குஷ்டரோகம், மூலரோகம், மார்வலி, காமாலை இவைகளெல்லாம் சொஸ்தமாகும்.

மூத்திரரோகம் பிறமியரோகம் இந்தஇரண்டுக்கும்
எகுசெந்தூரங் கொடுக்கத்தகுமுந்தி பேதி
சுகம் வாந்திக்கு கொடுக்கப்பட்டகிரமம்.

கொட்டைமுத்துயெண்ணெய் சேர் (க) கொண்டுவந்து அதில் இரண்டு விராகனெடை கற்கண்டு தூளசெய்துகலந்து வியாதிக்காரனுக்கு காலைமாலை வேளையொன்றுக்கு விராகனெடை (க) ஆக சரீரபலத்துக்குத்தக்கபடிக்கு ஐந்து நாள்முதல் பத்துநாளவரைக்கும் கொடுக்கலாம். பிறகு வாந்தியாகும் படிக்கு ஏதாவது மருந்துகொடுக்கிறது.

மறுபடியும் பேதிக்குக்கொடுக்கிற கிரமம்,

கடுக்காய்த்தூள் விராகனெடை (௧) கொட்டைமுத்தெண்ணெய் சரீரபலத்துக்குத் தக்கபடி அரைக்கால்சேர் முதல் கால்சேர் வரையில் மேற்படி பார்த்து சேர்த்துக்கொடுக்கிறது

மூத்திரரோகம் பிரமியரோகத்துக்கு ஏது செந்தூரம்கொடுக்க அனுபானம்

நெல்லிமுள்ளிக்கோல விராகனெடை (௫) அகில இரண்டு சேர தண்ணீர்விட்டு நாலத்தொன்றாய்க் காய்ச்சி கால்சேர் தண்ணீராகச் சுண்டினவுடன் இறக்கிக்கொண்டு அந்தக்கியாழத்தில் மருதஞ்சன்தூள் விராகனெடை (௩) சீந்திற்கொடி சத்து விராகனெடை (௨) தேன் விராகனெடை (௧) இவைகளையெல்லாம் கலந்து அதனுடன் ஏது செந்தூரம் புகநாயவராம போதத்தக்கொடுக்கிறது. மூத்திரரோகம், பிரமியரோகம், இவைகள் சொஸ்தமாகும்

சீந்தில்கொடி சத்து எடுக்கிற விபரம்

கணுவினமேற்படாத முற்றின சீந்திற்கொடியை நன்றாய் பக்குவமானதை மேல்தோலைச் சீவி உள்ளிருக்கிற பட்டைச் சீவித் துண்டித்து பனஞ்சோலை நறுக்கி நன்றாய் இடித்து வைத்துக்கொண்டு அந்த இத்தத்தில் மேற்படி கொடி நசுக்கினதைக்கட்டு மூழ்கச்சலம் விட்டு அரைக்கால் அளவு காலைச் சக்தலை தண்ணீர் பிசைந்து இரைத்து பிழிந்தெடுத்த சக்கையை நன்றாய் பக்குவமாகக் கலக்கி அதில் பிழிந்த பட்ட சத்து சலத்தில் கலந்து போகிறது பிறகு அந்தத் தண்ணீரை இறுத்து வடித்தபிறகு அடியில் வெள்ளையாகச் சத்திருக்கும் அதைப் பிரித்து உலர்த்திக்கொள்ளுகிறது

(இரண்டாவது முறை)

மூத்திரரோகம் பிரமியரோகத்துக்கு, ஏது செந்தூரம் கொடுக்க அனுபானம்

சீந்திற்கொடிச்சத்து விராகனெடை (௧) ஏலம் சர்க்கரை விராகனெடை (௨) தேன் விராகனெடை (௧) இவைகளை

யெல்லாங்கலந்து அந்திடனே எருசெந்தூரம யுக்தானுசாரம சேர்த்துக்கொடுக்கிறது. மேற்சொல்லியரோகம சொஸ்தமாகும

மேற்படி மூன்றுமுறை அனுபானம்.

ஆகருலிபஞ்சகசூரணம விராகனெடை (உ) எருசெந்தூரம யுக்தானுசாரம. இரண்டுங்கலந்து தேனிற கலந்து கொடுக்கிறது. ஆவின்பாலிலும ௨ ருவனெடைசெய்துகொடுக்கலாம

ஆகருலிபஞ்சகசூரணத்தின்விபரம்.

ஆவாரையிலை, அப்படியே அதனுடைய பூ, அதனகொழுந்து, அதன் வேர்ப்பட்டை, அதன மரத்தின்பட்டை, இவவைந்துவகையும நிழலிலுலர்த்தியகாயவைத்து ஒருமிக்கயிடித்து சூரணம செய்துவைத்துக்கொள்ளுகிறது. இதற்கு ஆகருலிபஞ்சகமென்று சொல்லுகிறார்கள்.

(நாலாம முறை.)

மூத்திரரோசம் பிரமியரோகத்துக்கு செந்தூரம் கொடுக்க அனுபானம்

குராசாணிஓமம விராகனெடை (௧) பேரிசசங்காய விராகனெடை (௧) இவைகளிரண்டையும் பொடித்து எருசெந்தூரம யுக்தானுசாரம சேர்த்துக்கொடுக்கிறது. இந்த ஔஷதஞ்சாப்பிட்ட ஒருசாமத்துக்குமேல கொஞ்சம மயக்கமவரும, அதனால கெடுதிவராமாட்டாது. இதைக்கொண்டு மதுமேகம, மூத்திரரோகம, பிரமியரோகம யாவற்றும சொஸ்தமாகும, உடனே பத்தியம வாங்கவும.

க்ஷயரோகத்துக்கு எருசெந்தூரங்கொடுக்க அனுபானம்.

சொர்ணபஸ்பம கொடுக்கிறசமயத்தில் க்ஷயரோகத்துக்குச்சொல்லிய அனுபானங்களில எருசெந்தூரம சேர்த்துக் கொடுக்கிறது, க்ஷயரோகம சொஸ்தமாகும.

வெங்குஷ்டத்துக்கு எகுசெந்தூரம்கொடுக்க அனுபானம்

இதற்கு மாபல்லாதக ரசாயனமாகிலும், பிருங்காதிசூரணமாகிலும், பாலரோகசிந்தாசோதகமாகிலும் பிரதானமாய்க் கொடுக்கிறது. இந்த மூன்றுமருந்தினுடைய விவரஞ்சொல்லுகிறோம்,

மா, பல்லாதகரசாயனஞ்செய்கிற விபரம்.

எகுசெந்தூரஞ் சேர் (௧) முசுக்குடித்த புங்கஞ்சேங்கொட்டை சேர் (௪) நிறுத்துக்கொண்டு பிறகு அந்தச்சேங்கொட்டை செங்கல்தூண்டுகளுடன் கலந்து சட்டியிலேபோட்டு தண்ணீர்விட்டு தேய்த்துக்கழுவினால் சேங்கொட்டை சுத்தியாகும் பிறகு அந்தச் சேங்கொட்டையை இரண்டுதுண்டாய் நறுக்கி நெய்புரட்டின பானையிற்போட்டு (௧௨) சேர் தண்ணீர்விட்டு அடுப்பிலேவைத்து தீபோட்டு எட்டுசேர் அளவிருக்கும்படி வடிகட்டிக்கொள்ளுகிறது. மிச்சப்பட்ட வண்டலை அப்படியே சுத்தமில்லாத சேங்கொட்டை நீக்கிப்போடவும். மேற்படி பானையைச் சுத்தமாகக்கழுவி மேற்படி கஷாயத்தில் எட்டுசேர் பாலசேர்த்து அந்தப் பாத்திரத்திற்போட்டு அடுப்பிலேற்றி தீபோடுகிறது. பால்சுண்டி கஷாயங்கெட்டியாகிற பதத்தில் அதில் கற்கண்டுசேர் (௪) நெய்சேர் (௨) இந்த இரண்டுஞ் சேர்த்துக்கடைந்து இறக்கிக்கொள்ளுகிறது. ஆறினபிறகு கிராம்பு, ஏலம், ஜாதிக்காய், சீரகம், மிளகு, இவைகளெல்லாம் சமபாகஞ்சேர்த்து சூரணம்செய்து அந்தச் சூரணஞ் சேர் (௧) வஸ்திரகாயஞ்செய்த கடுக்காய்த்தூள் சேர் (௧) முற்றின நெல்லிக்காய்ச்சாறு சேர் (௧) தேன்சேர் (௧) இதுகளெல்லாஞ்சேர்த்து சூரணஞ்செய்து மேற்சொல்லிய செந்தூரஞ் சேர்த்துக்கலந்து அந்த நெய்ப்பாத்திரத்தில்போட்டு நன்றாய்க்கலந்து தினந்தோறும் சூரியபுடத்திலே வைக்கவும். இந்த ரசாயனத்தினளவு (௧) வராகனெடை வரையில் கொடுக்கலாம்.

மாபல்லாதக ரசாயனத்தினால் சொஸ்தமாகும் வியாதிகள்.

வெங்குஷ்டம் ஊணவடிக்குஷ்டம், மேகரோகம், அ...

கிரியாந்தம், க்ஷயகாசம், சுவாசம், வெண்குஷ்டத்தினால் வந்த பலக்குறைவு, மயிர்வெளுப்பு, கால் கைவிரல் குறைவு பட்டு இருந்தபோதிலும் பழையபடியாகும் சந்தேகமில்லை. அனுபோகத்துக்கு வந்த அவுஷதம்

பிரங்காதிச்சூரணஞ் செய்கிறவிபரம்.

கிராம்பு, ஏலம், ஜாதிக்காய், சுக்கு, திப்பிலி, மிளகு, சீரகம், கழுவியவெள்ளுறு, கறுத்தசேங்கொட்டை, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி, வகைக்கொன்றுக்கு விராகனெடை (௫) நிழலிலுலர்த்தின கையாந்தரை சேர் (௩௦) இவைகளையெல்லாஞ்சேர்த்து இடித்து வஸ்திரகாயஞ்செய்து அந்தச்சூரணத்தில் ஏனாறுவிராகனெடை ஏகுசெந்நூரம் யுக்தானுசாரஞ்சேர்த்து நெய்யிற் கலந்துகொடுக்கிறது. மூத்திரரோகம், வெண்குஷ்டம், மூலரோகம், இவைகளெல்லாஞ் சொஸ்தமாகும்.

பாலசிக்ஷசோத்தக மாதிகிருதம்செய்கிற விபரம்.

ஆடாதோடைத்தழை, சீந்திற்கொடி, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி, பேய்ப்புடல், கண்டங்கத்திரி, நாளப்பட்ட வேப்பம்பட்டை, புங்கவேரின்பட்டை இவைகளையெல்லாம் வகைக்கொன்றுக்கு சேர் (௧) ஆகக்கொண்டுவந்து பத்துச்சேர் தண்ணீர்விட்டு இரண்டரைச்சேர் தண்ணீராகக் காய்ச்சி இறக்கிக்கொண்டு அதிற் பசுவினெய் சேர் (௨) மேற்சொல்லிய சரக்குகளில் வகைக்கொன்றுக்கு விராகனெடை (௨௦) கொண்டுவந்து தண்ணீர்விட்டு அரைத்து அந்த நெய்யில் இந்தக்கல்கங்களைக் கரைத்து பிறகு நெய்காய்ச்சி மெழுகுபதத்தில் இறக்கிக்கொள்ளுகிறது. இதனுடைய அளவு (௨) விராகனெடை ஏகுசெந்நூரம் யுக்தானுசாரம் இரண்டிரு கலந்துகொடுக்கவும்.

பாலசிக்ஷசோத்தசமாதி கிருதத்தினால்
சொஸ்தமாகும் வியாதிகள்.

ஜீரணசுரம், பாண்டு, இருமல், பித்தரோகம், குஷ்டரோகம், சொரி, இவைகளெல்லாஞ் சொஸ்தமாகும்.

முத்துசாமிதீக்ஷிதர், காந்தசெந்தூரம் எதுசெந்தூரம்
செய்தபிரகாரம் செய்துக்கொள்ளுகிறது.

காந்தசெந்தூரத்தின் குணம்.

அக்கினிமந்தம், பாண்டுரோகம், சோபம், காமாலை, கும்பகாமாலை, அஸிகார், மேகரோகம், பிரமியம், பித்தரோகம், இந்தவியாதிகளுக்கு அந்தந்தவியாதிகளுக்கு அநுபானத்தினால் அந்தந்த சரீரகுணமறிந்து கொடுத்தால் மேற்சொல்லிய வியாதிகள் சொஸ்தமாகும். இதனடியில் அந்தந்த வியாதிக்கு அனுபானமும் விபரமும் தனித்தனியாகச் சொல்லுகிறோம்.

காந்தசெந்தூரம் கொடுக்கிறதற்குமுந்தி வாந்திக்கும் பேதிக்கும் கொடுக்கிறவிபரம்

எந்தசெந்தூரம் கொடுக்கப்பட்டகாலத்திலும் சொல்லியபிரகாரம் வாந்திக்கும் பேதிக்கும் கொடுக்கிறது.

அக்கினிமந்தத்துக்குக் காந்தசெந்தூரம் கொடுக்க அனுபானம்

காந்தசெந்தூரம் [illegible] அதற்கு நிர்ணயங்களுபாகமாகிலும் இந்த முறையில் அனுபானங்களில் முறைப்படி சேர்த்துக் கொடுக்கலாம். இதற்கு பாக [illegible] பட்ட அவுஷதம் அக்கினிமந்தத்துக்கு எந்தசெந்தூரம் கொடுக்கிற இடத்திலும் சொல்லியிருக்கிறது. அந்தப்பிரகாரம் செய்து கொடுக்கிறதுதவிர விடங்காதிசூரணமுப்படி பேதிக்குவாதி இந்த இரண்டுவிபரமும் சொல்லுகிறோம்.

விடங்காதிசூடசெய்கிற விபரம்

வாயவிளங்கம் பலம் (க) கருப்புச்சேங்கொட்டை பலம் (க) கொடிவேலிப்பட்டை பலம் (க) நிலக்கொடிவேலம் பிராணிலயநீக்கி உள்ளிருக்கிற சதையைப்பறித்து எடுத்துக் கொண்டது பலம் (க) திப்பிலி சுக்கு பலம் (க) இவ்வெட்டுவகையும் கல்லுரலிலேபோட்டு இடித்துச் சூரணமாக்கி வஸ்திரகாயஞ்செய்து வைத்துக் கொள்ளுகிறது. அந்தச்சூர

ணாதுக்கு சமபாகம் பழையவெல்லம் பசுநெய் இந்தமூன்றும் நன்றாய்க்கலந்து வைத்துக்கொள்ளுகிறது. இந்த அவுஷதத்தின் அளவு இரண்டரைவிராகனெடை இதனால் அதிசாரம், மூலரோகம், சொஸதமாகும்.

இங்குவாதிசூரணஞ் செய்கிறவிவரம்.

நல்ல சுத்தமானபெருங்காயம் வறுத்தது விராகனெடை (க) பச்சைவசம்பு விராகனெடை (உ) சுட்ட வசம்புகரி விராகனெடை (உ) திப்பிலி விராகனெடை (ங) சுக்கு விராகனெடை (ச) ஓமம் விராகனெடை (ரு) கடுக்காய்த்தோல் விராகனெடை (சா) சித்தாமூலப்பட்டை விராகனெடை (எ) கோஷ்டம் விராகனெடை (அ) இவைகளெல்லாஞ்சேர்த்து சூரணஞ்செய்து வஸ்திரகாயஞ்செய்து வைத்துக்கொள்ளுகிறது. இதனுடைய அளவு (உ) விராகனெடை அவுஷதம் கொடுக்கும்போது இந்தச்சூரணத்துடன் ஒருபலந்தண்ணீர் சேர்த்துக்கொடுக்கிறது அல்லது மோரிலாகிலும் தயிரின தெளிவுதண்ணீரிலாகிலும் சாராயத்திலாகிலும் அப்படியே சாராயத்தில் இந்தச்சூரணஞ் சேர்த்துக்கொடுத்தால் பேதி சொஸதமாகும்

பாண்டு, சோவை, காமாலை, கும்பகாமாலை, அலிமக இதுகளுக்கு காந்தசெந்தூரங்கொடுக்க விபரம்.

காந்தசெந்தூரம் புகாறுசாரம் அதற்கு மண்டூகபரணிலேகியமாகிலும் சிந்தாதிலேகியமாகிலும் தேசமூலாதிலேகியமாகிலும் சேர்த்துக்கொடுக்கிறது. இந்த மூன்றினவிபரமுஞ் சொல்லுகிறோம்

மண்டுகபரணிலேகியஞ் செய்கிறவிபரம்

வல்லாரையிலையின்சாறு சேர் (௰௬) பசுவின்நெய் சேர் (ச) இந்த இரண்டும் ஒருபாத்திரத்திற்போட்டு அரைச்சேர் தண்ணீர்பாவில் இறக்கிக்கொண்டு அதில் இரண்டுசேர் கற்கண்டுபூராசேர்த்து சீனிச்சக்கரை சேர் (உ) சீரகத்தூள் சேர் (உ) மிளகுதூள் சேர் (உ) இவைகளையெல்லாஞ்சேர்த்து நன்றாய்க்கடைந்து ஒருபாத்திரத்திற்போட்டு வைத்துக

கொள்ளுகிறது. இந்தலேகியத்தின் அளவு ஒருவிராகனெ டை. இதனால் மேற்சொல்லிய ஐந்துவிதமான வியாதிகளும் சொஸ்தமாகும்.

சிந்தாதிலேகியம்

புளியங்கொழுந்தின்சாறு சேர் (ம்ங) ஒருபாத்திரத்தில் விட்டு அதில் இரும்புஆணி சேர் (யரு) போட்டு (மறு) நாள் வைத்து, (மகூ) - ம நாள் மேற்படி ஆணிகளையெடுத்துவி ட்டு மேற்படி சாறைவடிகட்டி அதில் பழையவெல்லந் சேர் (அ) கலந்து காய்ச்சி பாகுபதத்தில் அதில் சுக்கு, திப் பிலி, மிளகு, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி, வா யவிளங்கம், சித்தாமூலவேர்ப்பட்டை, சிரக மலவங்கப்பட் டை, லவங்கபத்திரி, இவை வகையொன்றுக்கு பலம் (ங) சூரணித்து வஸ்திரகாயஞ்செய்து தூவிக்கிண்டி தேன்சேர் (உ) கலந்துவைத்துக்கொள்ளவும். இந்த லேகியத்தின் அளவு விராகனெடை (ரு) இந்த லேகியத்தினால் மேற் சொல்லிய ஐந்துவிதமான வியாதிகளும் சொஸ்தமாகும்

தசமூலாதிலேகியம்

வில்வவேர்கட்டை, முன்னைவேர், பாதிரிவேர், சிறுவாகை வேர், குமிழம்வேர், கண்டங்கத்திரி, முள்ளிகத்திரி, செ ருஞ்சிவேர், மூக்குத்திப்பூண்டுவேர், சிறுபூளைவேர், முரு ங்கைவேர், திப்பிலி, கட்டுமுள்ளி, செவியம், சித்தாமூலம், சுக்கு, தேவதாரம், வெள்ளைசாரணைவேர், பங்கம்பாளை, இவை வகையொன்றுக்கு நாலுபலம் எடுத்து இடித்து அதில் (சம) சேர் தண்ணீர் விட்டு மூன்று நாள் ஊறவைத்து நாலாமநாள் அடுப்பேற்றி கமலாக்கினி நிப்பாட்டு (ய) சேர் தண்ணீராக சுண்டினவுடன் இறக்கிக்கொள்ளுகிறது. அதில் பழையவெல்லம் சேர் (ரு) இந்திரசசேர் (உ) இந்த இரண்டும் அந்தக்கஷாயத்தில் சேர்த்துப் பாகுசெய்து பத மானபிறகு அதில் சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி, லவங்கப்பட்டை, லவங்கபத்திரி, ஏலம், கோரைக்கிழங்கு, இரும்புஅரப்பொடி, கட்டுமுருங்கைப்பட் டை, ஓமம், இவைகள் வகையொன்றுக்கு விராகனெடை (ரு)

ஆக இடித்து வஸ்திரகாயஞ்செய்த சூரணமும் தேன் சேர் (க)-ம் கலந்து நன்றாய்க்கடைந்து வைத்துக்கொள்ளு கிறது. இரண்டு விராகனெடை முதல் நாலு விராகனெ டைவரையில் சாப்பிடலாம்.

இதற்குபத்தியம்.

புளி, கடுகு, நல்லெண்ணெய், மிளகாய், இவைகள் ஆகா. திததிப்பு, மோர், வெள்ளாட்டுப்பால் பழநெய், செரிஞசிக் கீரை, இவைகளெல்லாஞ் சேர்த்துக்கொள்ளலாம்.

பிரமியரோகத்துக்கு காந்தசெந்தூரம் கொடுக்க அனுபானம்.

எகுசெந்தூரத்தில் பிரமேகத்திற்குச்சொல்லிய அனுபா னப்படி காந்த செந்தூரமும் கொடுக்க பிரமியரோகம் சொஸ்தமாகும்.

பிறதறரோகத்துக்கு காந்தசெந்தூரம்கொடுக்க அனுபானம்.

சொர்ணமாலயவசந்தத்தில் பிரதறரோகத்துக்கு சொல் லிய அனுபானப்படி காந்த செந்தூரம் கொடுக்கப்பிறதற ரோகஞ் சொஸ்தமாகும்.

முத்துசாமிபிள்ளைதா,
தண்டவாளம் செந்தூரம்

தண்டவாளத்தைநன்றாய்ப்பொடிபண்ணி வஸ்திரகாயஞ் செய்ததூளை இருப்புச்சட்டியிற்போட்டு கோமுத்திரம் அந் தத்தூள் முழுகிறவரையில்விட்டு அடுப்பிலேற்றி தீப்போ ட்டுக் கரண்டியினுல் கிண்டி சுண்டவைக்கிறது. இப்படி மூன்றுதடவை சுண்டவைக்க தண்டவாளப்பொடி சுத்தி யாகும். இப்படி சுத்திசெய்த தண்டவாளத்தூள் சேர் (க) நெல்லிக்காய்கெந்தகஞ் சேர் (க) இந்த இரண்டுங் கலந்த திலபோட்டு கருஊமத்தையிலைச் சாற்றினல் ஈரம் உலரா மல் ஏழுதினம் அரைத்து அதை வில்லைதட்டிக்காயவைத்து ஓட்டிலவைத்து இந்துசீலைமண்செய்து பூமிக்குமேல (கறு) சாண் உயரம் புடம்போடவும், இப்படி கருஊமத்தைச்சாற் றினல நாலு சாமம் அரைத்து முன்சொன்ன விழுக்காடு

ஐந்துபுடம்போடுகிறது. அதன்பிறகு கற்றாழைச்சோற்றி னால் நல்வாலுசாமம் அரைத்து வில்லைசெய்து இரண்டு சாண் உயரத்தில் ஐந்துபுடம்போடவும், அதன்பிறகு பார வைக்கு நல்லவண்ணமாக இராவிட்டால் மறுபடியும் இரண்டு புடம்போடவும். இந்தப்பிரகாரம் செய்தால் அவுஷதம் சித்தியாகும்.

இந்தத் தண்டவாளசெந்தூரத்தின் குணம்.

சீரணசுரம், அதிசாரம், கிராணி, அக்கினிமந்தம், மூல ரோகம், குன்மரோகம், பாண்டுரோகம், ஆகிய இவையெல் லாம் அந்தந்த ரோகத்துக்குத் தக்க அனுபானத்தில் சாப்பா லத்துக்கு தக்கபடிகொடுத்தால் சொஸ்தமாகும். மேற் சொல்லிய அவுஷதம் மேற்சொல்லிய ரோகங்களுக்கு ஆரம் பத்தில் கொடுக்கலாம். அல்லது அந்தரோகம் சொஸ்த மானபிறகு ஏதாவது சேஷமிருந்தால் இந்தப்புஷ்டிக்காக வும் சரீரபுஷ்டிக்காகவும் கொடுக்கலாம். ரோகம் பலமாக இருக்கும்போது கொடுக்கலாகாது. இனிமேல் அந்தந்த வியாதிக்குத்தக்க பிரத்தியேக அனுபானஞ்சொல்லுவோம்.

சீரணசுரத்துக்கு தண்டவாளசெந்தூரம் கொடுக்கும் அனுபானம்.

சுக்கு விராகனெடை (கவ) மிளகு, விராகனெடை (சவ) இந்த இரண்டையும் சமமாய்த்தூளாக்கிச் சாப்பிட்டு அரிசி தேன் விராகனெடை (1) தண்டவாளசெந்தூரம் அரிசிபிர மாணம் சேர்த்து காலையிற்கொடுக்கவும், மாலையில் சுக்கு விராகனெடை (உ) மிளகு விராகனெடை (ஂ) கோரைக்கி ழங்கு விராகனெடை (உ) இந்த மூன்றையும் சேர்த்து இரண்டு சேர் தண்ணீர்விட்டு கால்சேர் தண்ணீராக இறக்கிக்கொ ண்டு அந்த கஷாயத்தில் தண்டவாளசெந்தூரம் அரிசிப்பிர மாணம் சேர்த்துக்கொடுக்கவும். இப்படிப் பத்துதினம் கொ டுத்தால் சீரணசுரம் சொஸ்தமாகும்

இதற்குப் பத்தியம்.

புளி, நல்லெண்ணெய், கடுகு, தயிர், பால் ஆகிய இவை ஆகா

அதிசாரம், கிராணி, மூலரோகம், இவற்றிற்குத் தண்டவாள செந்தூரங்கொடுக்க அனுபானம்.

தண்டவாளசெந்தூரம் யுகதாஹுசாரம் தேன் விராகனெடை (வ) இவைகசேர்த்துக்கொடுத்து அதன்மேல லவங்காதி மோதகம் சாப்பிடக்கொடுக்கவும்.

லவங்காதி மோதகம்

கிராம்பு, ஜாதிக்காய், சுக்கு, சிறுநாகப்பூ, ஏலம், வகை ஒவ்வொன்றுக்கு விராகனெடை (௨வ) இவற்றை பாதாம்நெய்யில தனித்தனியாக வறுத்துக்கொள்ளவும். பாதாம நெய்யகப்படாவிட்டால் பசுவின்நெய்யில வறுத்துக்கொள்ளவும். எல்லாச்சரக்குகளையும் ஒன்றாய்ச்சேர்த்துச் சூரணஞ்செய்து இரும்புப்பாத்திரத்தில அந்தச்சூரணத்தை போட்டு அதில நல்ல தேன் சேர் (வ) சேர்த்து அடுப்பிலேற்றி நன்றாய்க கிண்டி பக்குவமாயிறக்கிக்கொள்ளவும். இதன அளவு விராகனெடை (௨) உருண்டைசெய்து சாப்பிடக்கொடுக்கவும்.

அக்கினிமந்தத்திற்குத் தண்டவாளசெந்தூரம் கொடுக்க அனுபானம்.

தண்டவாளசெந்தூரம் யுகதாஹுசாரம், இஞ்சிச்சாறு விராகனெடை (ற) கற்கண்டு விராகனெடை (௧ற) இம்மூன்றுஞ் சேர்த்துக்கொடுக்க அக்கினிமந்தஞ் சொஸ்தமாகும்.

பாண்டுரோகத்தாக்கு தண்டவாள செந்தூரங் கொடுக்க அனுபானம்.

காந்தசெந்தூரத்தில் பாண்டுரோகத்துக்குச் சொல்லிய சிந்தாதிலேகியத்துடன் கொடுக்க பாண்டுரோகஞ் சொஸ்தமாகும்.

அப்புராவு, கிராணி, உடும்புசூரணம்.

வயதுசென்ற உடும்பு கொண்டுவந்து அதன்தலை, நகம், வயிற்றிலுள்ள கல்மிஷங்களெல்லாம நீக்கிப பிறகு காயம பலம (வ) இந்துப்புபலம (ற) வளையலுப்பு பலம (வ) பூண்டு பலம (௧) சுக்கு பலம (௧) திப்பிலி பலம (ற) மிளகு பலம (௧) சவுட்டுமண்பலம (௧) ஓமம பலம (௨) இவைக

ளெல்லாவற்றையும் இடித்து சூரணம்செய்து மேலெசொல
லிய உடும்பு வயற்றிலரொப்பி கயற்றினாலகட்டி பிரமியிலே
சசாரபடி (ச) ஒரு பானையிற்போட்டு மேலசொல்லிய
உடும்பை மேற்படிசாத்திறபோட்டு வேகவைத்துசமகண
டினபிறகு மேற்படி உடும்பையெடுத்து நன்றாயடித்துக
காயவைத்து மறுபடியும் இடித்து வஸ்திரகாயஞ்செய்து
ஒருபாத்திரத்தில் வைத்துககொள்ளவும. வேளை (க) க்கு
(உ) விரலகொண்ட அளவு எடுத்து தேனில் மத்தித்துக
கொடுக்கவும. இந்தப்படி (உ) வேளையும (ரு) மண்டலம
கொடுத்துவந்தால் அறுவிதமான கிராணி, மூலவாயவு சூசி
காவாயவு இவைகள சொஸ்தமாகும. இசசாபபத்தியம
பொன்னம்பலம்,

வெள்ளை பிளாஸ்திரி.

கற்பூரசிலாசத்து விராகனெடை (ச) எலுமிச்சம்ப
ழம் ஐந்தில் உள்ள ரசத்தில் மேற்படி கற்பூரசிலாசத்தை
வேகவைத்து மேற்படிரசஞ் சுண்டினபிறகு நல்லசலம்வி
ட்டலம்பி கலவத்திலிட்டு பசுவின்வெண்ணெய பலம (ரு) விட்டு
அரைத்து, வெள்ளைக்குங்கிலியம் பலம (ரு) அதை ஒரு
சலாகையில ஒட்டி அனலில நன்றாயக காய்ச்சினபிறகு அ
தைப்பிசைந்து திருமபவும அனலிலகாட்டி இப்படி மூன
றுதடவை அனலிலகாட்டிப பிசைந்து அழுக்கை நீக்கி
ஆறினபின் முன்சித்தப்படுத்தின மருந்துடன சேர்த்து
அரைத்து மறுபடியும வெள்ளைக்குங்கிலியம விராகனெடை
(உ) வெள்ளைமெழுகு விராகனெடை (ச) இதுரெண்டுங
காய்ச்சி வடிகட்டிக்கொண்டு முன மருந்துடன சேர்த்து
அரைத்து ஒரு மணிநேரம சென்றபின ஒரு சிறங்கைத்தண
ணீர்விட்டு வெளளையாகிறவரையிலரைத்து, பிறகு டப்பியில
வைத்துககொள்ளவும. இதை சிரங்குகளின்மேல தடவி
வர அவை சுவஸ்தமாம.

சிலந்திரணத்துக்கு மஞ்சள் பிளாஸ்திரி

முருதாரசிங்கு விராகனெடை (உ) மனோசிலை விராகனெ
டை (ரு) எலுமிச்சம்பழம (ரு) ன் ரசத்தில் வேகவைத்து சுத

அழுகுணிச்சிரங்கிற்குத்தூளும் இதனால் துர்மாம்சம்யெடுக்கிற விபரமும்.

கற்பூர சிலாசத்துக்கட்டி விராகனெடை (உ) அதற்குச் சுண்ணாம்பினால கவசஞ்செய்து கொஞ்சங் காயவைத்து இரண்டு விராட்டியில் புடம்வைத்து யெடுத்துத் தூள்செய்து அத்துடன் ரசகற்பூரம் பணவெடை (கo) மனோசிலை பணவெடை (கo) சேர்த்துத்தூளசெய்துவைத்துக்கொண்டு சிறங்கில் துர்மாம்சமிருந்தால் மேற்படி தூளை தூவ அது கரைந்துபோம். அது இல்லாவிட்டால் யெயிற்குழைத்து துணியிற்றடவிப்போட அழுகுணிச்சிரங்கு ஆறிப்போம்.

கட்டியுடையாமலிருந்தால் அதற்குப்பட்டி.

சாதிலிங்கம் பணவெடை (ரு) கற்பூரம் பணவெடை (உ) இரண்டுங்கலந்து தூள்செய்து பின்பு சீனாக்காரம் பலம் (க) சேர்த்துத் தூளசெய்து கோதுமையை ரொட்டித் தூளை அத்துடன் சேர்த்து பட்டிகட்ட கட்டியுடையும்.

இரணத்தில்புழு உண்டானால் அதற்குத் தூள்.

மனோசிலை விராகனெடை (உ) சவ்வீரம் பணவெடை (கo) சீனாக்காரம் பலம் (o) கற்பூரம் விராகனெடை (க) இவைகளெல்லாவற்றையும் பொடிசெய்து இதில் கொஞ்சமெடுத்து கட்டியின்மேல தூவி அதற்குமேல துணி பிய்த்துப்போட்டுக்கட்டவும்.

LAPID CALAMIRE.

லாபிட்டு கியாலாமயிர.

சிரங்குகாய்வதற்கு பிளாஸ்திரி.

(இங்கிலீஷ்முறை.)

லாபிட்டு கியாலாமயிர என்பது பூமியிலிருந்து யெடுக்கப்பட்ட ஒருவிதவஸ்து, அதில சேர் (க) இதைத்தூளசெய்துவஸ்திரகாயஞ்செய்துவைத்துக்கொண்டு மெழுகுசேர் (க) தேங்காயெண்ணெய் சேர் (உ) இவ்விரண்டையும் காய்ச்சி மேற்படி தூளை கொஞ்சங் கொஞ்சமாக தூவி, கரண்டி

யினால் தழாவிவரவேண்டும். உறண்டையாகாமல் அடிக் கடி தழாவி இளகலாக இருக்கும்போதே வஸ்திரகாயஞ் செய்து ஒரு டப்பியில் வைத்துக்கொள்ளவும்.

RESIN FLOW.

துர்மாமிச நிவாரண பிளாஸ்திரி.

ரேஸின் என்பது ஒருவித குங்கிலியம், இது கட்டியாய சேர் (௧) மஞ்சள் மெழுகு சேர் (௧) தேங்காயெண்ணெய் சேர் (௧). மேற்சொல்லிய மெழுகு கட்டியாக இருந்தால் இந்த குங்கிலியமும் கட்டியாகயிருக்கவேண்டும், இரண்டிலொன்று தூளாகயிருந்தால் மற்றொன்றும் தூளாக இருக்கவேண்டும், இவ்விதம் இரண்டையும் சேர்த்து ஒரு பாத்திரத்திற்போட்டு அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்துக் காய்ச்சி தேங்காயெண்ணெயுஞ்சேர்த்துச்செம்மையாய்க்காய்ச்சவேண்டியது. அதிகத் தீபோட்டால் கருப்புநிறமாகும். ஒன்றாய் உரு கின பிற்பாடு கீழேயிறக்கி வடிகட்டி டப்பாவில் அடைத்து வைக்கவும். இந்தப்பிளாஸ்திரி துர்மாமிசங்களை யெடுக்கிற தற்காகவும் கலவிஷங்களை நிவர்த்திசெய்கிறதற்காகவும் உப யோகப்படும்.

அண்ணுசாமி நாயக்கர்,

காதுவலி நிவாரண நெய்.

வலம்புரிக்காயிரண்டு, வெள்ளைப்பூண்டு பல்லு (௧) பன் றிநெய் விராகனெடை (௫) கடலநுரை பணவெடை (௬) வசம்பு பணவெடை (௩) மேற்சொல்லியபூண்டை உரி த்துத் தோல்நீக்கி மற்ற மூன்றுவகையுந் தூள்செய்து எல் லாவற்றையும் ஒரு பாத்திரத்தில் போட்டுக் கொதிக்கவை த்து நெய் கொஞ்சம் சிவந்துவருகிற பதத்தில் இறக்கி வடிகட்டிக்கொள்ளவும். இராத்திரியில் படுக்கும்போது இரு பூத்துளி நெய்யை கொஞ்சம் சூடவைத்து, காதில்விட்டு பஞ்சுவைத்து அடைத்துக் காலையில் பஞ்சை யெடுத்து விட்டால் காதுவலி நிற்கும்.

அய்யாவையங்கார,

சாம்பிராணிப்பதங்கம்.

பனிக்குசாம்பிராணி பலம் (க) கடலை அளவு துண்டுகள் செய்து இரண்டு கலயங்களின் வாயை நன்றாய்த்தேய்த்து சாம்பிராணியை ஒரு கலயத்திற்போட்டு மறுகலயம் மூடி வாய்க்கு பச்சைப்பயிறுமாவினால் சீலைசெய்து கெட்டிப்படுத்தி ஒரு சிறு அடுப்பிலவைத்து அதன்கீழ் நெய் பலம் (க) நல்லெண்ணெய் பலம் (க) இவ்விரண்டுங்கலந்து ஒரு விளக்கில் ஊற்றித் திரிகொளுத்தி எரியவிட்டு விளக்கில் எண்ணெயிருக்கிறவரையில் எரியவிடவும். ஆறினபின் எடுத்து மருந்தை சீசாவில் வைத்துக்கொள்ளவும். நீர்க்கோவைக்கு மூக்கில் தடவுகிறது. தலைவலிக்கு நெற்றியில் தடவுகிறது இப்படிச்செய்ய மேற்படி வியாதி சொஸ்தமாகும்.

சிறுநாகு அண்ணாசாமி,

சவுக்காரவைப்பு.

பூகாரம் படி (ரு) கிளிஞ்சிநீறு படி (ரு) இந்த இரண்டுங்கலந்து உதடுள்ள பானையிற்கொட்டி பானையின்மேல் நின்று வழிந்தோடும்படி அதில் மேலிருந்து சலமூற்றுகிறது. அதன்கீழ் சட்டிவைத்துப் பானையின்மேனின்று வழியும் சலத்தைப் பிடித்துக்கொள்ளவேண்டும். வழியும் சலமானது வெள்ளைநிறமாக வருகிறவரையில் சலம் விடவேண்டும். இப்படிக் கீழ்ச்சட்டியில் வடிந்தசலத்தை முன்போல அதிலூற்றி வழிந்தோடுஞ்சலத்தைக் கீழ்ச்சட்டி வைத்துப் பிடித்துக்கொள்ளவேண்டும். மறுபடியும் கீழ்ச்சலத்தை முன்போலூற்றி முன்போல பிடித்துக்கொள்ளுகிறது. இப்படி மடக்கிமடக்கி ஆறுதடவை செய்து வெள்ளைசலம் வருகிறதைப்பார்த்து நிறுத்திக்கொள்ளுகிறது. இவ்விதமெடுத்த சலம் படி (ரு) எடுத்து அதில் ஒருபடி விளக்கெண்ணெய் விட்டு அடுப்பினால் ஒரு நாழிகைவரை பொங்கிறப்பிக்கிறது. இப்படி ஒருநாளைக்கு மூன்றுதடவை

யாக மூன்றுநாள் கிண்டி நாலாநாள் அது கெட்டியாய்க் கறுப்பாகும். அந்தப்பாத்திரத்தில் வேறுபானையில் அதைப் போட்டு கெட்டியாயிருப்பதையெல்லாம் உடைத்துப்போடுகிறது. அப்போது தீப்போட்டுக்காய்ச்சுகிறது அது நன்றாய்ப்பாகானபின் ஒரு அகப்பையிலெடுத்து கீழ் ஊற்றிப்பார்த்தால் வெள்ளையாக இருக்கும் அந்தப் பதத்தைப் பார்த்து இறக்கிக்கொள்ளுகிறது. ஓட்டையிருக்கும்படியான அகப்பையாலெடுத்தால் அதிலுள்ள தண்ணீர் ஒழுகிப்போகும், சவுக்காரம் மாத்திரம் அந்த அகப்பையில் இருக்கிறது, அதை மரஅச்சில் ஊற்றி இரண்டு மூன்று நாழிகைக்குப்பிறகு ஆறி கெட்டியாய்ப்போகும். அதை யெடுத்து சீவி வைத்துக்கொள்ளவும்.

ஷேக்கு, வெள்ளைமெழுகு.

மஞ்சள்மெழுகு சேர் (௧) படிக்காரம் விராகனெடை (௨)
சௌக்காரம் பலம் (௧) இடப்புனல் முன்னா மெழுகை
ஒருசட்டியில்போட்டு அடுப்பிலேற்றி காய்ச்சி ஆகில
முன் படிக்காரத்தில் விராகனெடை (௧) தூள் … ய
போட்டு நன்றாயுருகின பிறகு கொஞ்சம் … றின
பின், மோர் சேர் (௧)-ல் மீதி ஒரு விராகனெடை படிக்காரத்
தைத் தூள்செய்து, உப்பு விராகனெடை (௧) தூள் … ய
தும் போட்டு இதில் கொஞ்சமெடுத்து, முன் … டு
படுத்திய மெழுகிலவிட்டு ஒரு அண்டாவில் இ … காரத்
தோண்டி சலம்விட்டு அதில் மேற்படிய சௌக் … ஸ்திரம
தில் பலம் (௩) கரைத்து அந்த அண்டாவின்மேல் … றி, வஸ்
போட்டு மேற்சொல்லியமெழுகை அண்டாவி … வை மெழுக்
திரகாயஞ்செய்யவும். இவ்விதம் மூன்றுதடவை … லலிய மோர்
கைக்காய்ச்சிக் கீழிறக்கி ஆறவிட்டு மேற்செ … லெழுதியபடி
கொஞ்சம்விட்டு கொஞ்சம் ஆறினபிறகு … பிறகு நாலாக
அந்த அண்டாவில் வஸ்திரகாயஞ்செய்த … பிறகு கொஞ்சம்
தடவை அந்தமெழுகைக்காய்ச்சிக் கீழ் … ல் சௌக்காரங் கலக்
ஆறினபின் மேற்சொல்லிய அண்டாவி … டு வேறு தெளித்த
திருக்கிற தண்ணீரை கீழே ஊற்றி …

தண்ணீர இரண்டுதோண்டி அந்த அண்டாவில் ஊற்றி மேற்சொல்லிய மெழுக்குசசட்டியை ஒருகையினலெடுத்துக்கொண்டு மெல்லியதாரையாக அந்த அண்டாவில்விட்டுக்கிழு கையினல கடைகிறதுபோல்செய்யவும். இப்படிச செய்தால் இந்தமெழுகானது மல்லிகைப்பூ இதழ்போலத் தனிததனியாக இருககும. அதையெடுத்து சுத்தமான பல கையின்மேல் வெள்ளைத்துணியை நனைததுபோட்டு அத ன்மேல தெளிதது அதன்மேல் கொஞ்சம மோர்தெளித்துக் கடுவெயயிலில் காயவைதது வெயயிலில மெழுகு உருகாமல் அது காயக்காய உப்புக்கரிபபுள்ள கிணற்றுசலததை மேலே தெளிததுவரவேண்டும. இப்படி சாயநதிரம வரையில் காயவைதது இரணடாமநாளும இப்படியே செய்யவேணடும. இபபடி ஆறுநாள் ஆறுதடவை மேற சொலலியபிரகாரமசெயதால மெழுகு வெள்ளையாகும்.

அப்புராவ், லிங்கக்கட்டு.

லிங்கம ஒரேகடடியாக விராகனெடை (ய) கெடடியாகப் பார்காதுவாரங்கி அதனமேல் வெள்ளைநூலால கட்டி தெரியாமல் நிறைறி முலைப்பால்சேர (ா)யில ஒருநாழிகை ஊறவைத்து, அடுப்பில் அகல்வைதது அதில் மேறபடி கட்டியைவைத்து வரகினித்தீபோடடு மேறசொலலிய பாலெல்லாவற் சமும் கரண்டியினல கொஞ்சங்கொஞ்சமவிட்டு சுருக்குக் கொடுக்கவும. இதுதான லிஙககசுததி. பின்பு வெள்ளை கிறவ்லிஙகாயச்சார சேர (கஉ) - ல் சாம்பிராணி விராகனெடை (உ) பொடிசெயதுபோடடு முன் சுததிசெய்த லிங் கத்திற்கு மடடுசாமம் சுருக்குககொடுகக லிஙகம கெட்டியாம். அதையெடுத்து அதனமேலுளள கலமிஷங்களை நீகக லிஙகத்திறம் நன்றயிருக்கும்.

உட்கொள்ளும்விதம்.

இந்த ஔஷதம் சன்னி, சைத்தியவாய்வு, நீர்க்கோர்வை, வாதவுபத்திரம் இவைகளெல்லாவறறிறகும் அரைப்பணவெடை ஒருபணவெடை கொடுக்கத்திரும்.

இலிங்கக்கட்டு. (வேறு)

மேற்சொல்லியபடிப்பாலில் சுத்திசெய்தலிங்கம்விராகனெடை (ய) வேப்பங்காய் முத்தின்காயாக் கொண்டுவந்து கணக்கி. எட்டுசேர் ரசமெடுத்து காலுசாமம் சுருக்குக்கொடுக்க கட்டும். இந்த ஔஷதம் பெரியரோகங்களுக்குக்கொடுக்கலாம்.

இலிங்கங்கட்டு. (வேறு.)

முன்சொல்லியபடிபாலில் சுத்திசெய்தலிங்கம் விராகனெடை (ய) சாமபிராணிபலம் (க) கற்பூரம்விராகனெடை (ரு) இந்தஇரண்டையும் கல்வத்திலரைக்கிற அனைத்தாலைமை போலாகும். [illegible] கல்வத்திலரைத்து இரண்டாமாள மேற்படி மை [illegible] சகலாத்துத்துணியில சட்டி லிங்கத்துக்குச்சுற்றி [illegible] நூதகிவிட்டால எரியும், எரிந்தாறினபின முன் செய்தது [illegible] செய்யவும். இப்படி தனைலமெனளம் செல்கிறவரையில் செய்தால கட்டும்; அது கொருத்துமிடத்தில் ரொம்பவும் சாக்கிரதையாய்க கட்டிகருகாமல் செய்யவேணடும். உபாயமானவியாதிக்குக கொடுக்கலாம்.

இலிங்கங்கட்டு. (வேறு)

மேற்சொல்லிய லிங்கம விராகனெடை (ய) கொசுத்தேனசேர் (உ) தேனை சட்டியில்விட்டு லிங்கத்தை அதிலவைத்து மேற்சட்டி மூடி வடவாக்கினித்திபபோட்டு தேனசுண்டினபிறகு கொஞசமிச்சபபட்டு அழுகுடன கொஞசமிருக்கையில் சிகப்பாயிருக்கும்பக்குவத்தில இறக்கிக்கொள்ளவும். இலிங்கங்கட்டும். இந்த ஔஷதம மதுமேகமுதலிய வைகளுக்காம.

இலிங்கங்கட்டு. (வேறு)

இலிங்கம் (ரு) அல்லது (ய) விராகனெடை ஒரேகட்டிபாயெடுத்து, கெந்தகம்விராகனெடை (ய) சூடம்விராகனெடை (ய) இந்த இரண்டும் தூள்செய்து ஒருசிட்டிகை ஒருஇரும்புசட்டியிற்போட்டு சட்டியை நெருப்பின்மேல்வைத்து மேற்சொல்லியதூள் உருகி நீராணவுடன் மேற்படி

கட்டியை அதிற்போட்டு புடமிட்டுக்கொடுக்கவும். இப்படி அந்தத்தூள் எல்லாம்முடிகிறவரையில் செய்யவும். தீபாக்கினியாயிருக்கவேண்டும். தீ அதிகமானால் பற்றியெரிந்துபோம்.

சயநீர் விழுக்கட்டு.

வெங்காரஞ் சாணிப்பாலில் சுத்திசெய்து வறுத்தது பலம் (௧) கடியுப்பு பலம் (௧) இந்த இரண்டுந் தூள்செய்து அந்தத்தூளை ஓட்டிலேபோட்டு கொஞ்சம் வெண்மையாகிறவரையில் வறுத்து எடுத்து இந்தத்தூளிற்கு சமனெடை நவச்சாரஞ்சேர்த்துப் பனியில்வைக்கத் தண்ணீராம். அந்த நீரை யெடுத்துக்கொள்ளவும். பனியில் வைத்தபடி சாயங்காலங்களில் மேற்சொல்லியதூளை கலவத்திற்போட்டு நீறும் சட்டியால் மூடி மேலே ஈரத்துணியால் மூடிவைத்தால் தண்ணீராம். இதுதான் சயநீரெனப்படும்.

மேற்சொல்லியசயநீர் அரைச்சேர், நடம் விராகனெடை (௪) செவ்வீரம் விராகனெடை (௧) இந்த இரண்டுந் தூள்செய்து அதிற்போட்டு விளங்கட்ட, ஒரேகட்டியாய ஐந்து அல்லது பத்து விராகனெடை வங்கக் குறட்டினால் பிடித்துக்கொண்டு இந்த சயநீரிலதுவைத்தெட்டு வாட்டவேண்டும். இவ்விதம் சயநீர் எல்லாம் முடிந்தபின், சூடம் விராகனெடை (௰) கெந்தகம் விராகனெடை (௨) இந்த இரண்டுந் தூள்செய்து இதை முன்சொன்னபடி ஓட்டில ஒரு சிட்டிகைபோட்டு அது உருகினபின் கட்டியை அதிற்போட்டுப் புரட்டுகிறது. இப்படி இந்தத்தூள் முடிகிறவரையில் செய்து எடுக்கக்கட்டும்.

சொர்ணலிங்கம்.

(இம்முறை மிக அபூர்வமானது. இதனால் அநேக வியாதிகள் தீரும்; ஆனால் இதை அதிக சாக்கிரதையாய்ச் செய்யவேண்டும்.)

இலிங்கஞ் சுத்திசெய்தது விராகனெடை (௩௦), ஒரு சிறு தாமிரச்செம்பில காடி சலம், பொற்றலைக்கையான்சாறு, குங்

பமேனிச்சார இம்மூன்றும் சமபாகமாகவிட்டு, கந்தகம், மனோசிலை, தாளகம், கலசசாரம், ரசம், ரசகற்பூரம், அடர, இந்த ஏழும் வகைவொன்றுக்கு விராகனெடை (க) இவற்றுள் இரசம், ரசகற்பூரம், இவ்விரண்டையும் வெற்றிலைச்சாறு, குப்பமேனிச்சாறு ஆகிய இவற்றாலரைத்துவில்லைகட்டிக்குக்கடவி மற்ற ஐந்து சரக்கையுந்தூள்செய்து மேற்படி செம்பில் போட்டு கட்டியை குமட்டிறெ லசையாமல் எடுத்து சொப்புக்குவைத்து அந்தச்சொப்புவாய்க்கு ஓடு மூடி சீலைமண்செய்து முழங்காலளவுள்ள பள்ளத்தில் ஒருமாதம் புதைத்துவைத்து பின்பு எடுத்து வேறு ஒரு ஓட்டில் சிறு துவாரஞ்செய்து, அந்தத்துவாரத்தை மூடியப் பிரகத்தகட்டில் அலயபாதடவி அடைத்து அப்பிரக ஓரத்துக்கு சீலைமண்செய்து சிறிய அடுப்பிலவைத்து வாலாக்கினித் தீபமோடு மேற்சொல்லிய ரசத்திலிருக்கப்பட்ட கட்டியை எடுத்து அப்பிரகத்தகட்டின்மேல்வைத்து செம்பிலிருக்கிற தண்ணீரை ஒரு குசியில் துவளிசுற்றி அதனால் மேற்படி தண்ணீரில் நனைத்து விடக்கட்டிக்குச சுருக்குக்கொடுக்கவும். இப்படி மேற்படி தண்ணீர் முடிகிற வரையில் ஒருநாளிரண்டுநாளானாலுங்கொடுக்கவேண்டும். மிகவுஞ் சாக்கிரதையாகச்செய்யவும். கட்டிக்குக் காற்று படக்கூடாது வெள்ளெருக்கம்பழச்சாறு பலம் (க) இளநீர் சலம் பலம் (க) காடி பலம் (க இம்மூன்றையுஞ்சேர்த்து இதில் பஞ்சலவணமுப்பு விராகனெடை (௨௦) செவ்வீரம் விராகனெடை (க) இவ்விரண்டையும் எலுமிச்சம்பழச்சாற்றலரைத்துக் கட்டிக்குத்தடவி மேற்சொல்லிய தண்ணீரை இருப்புச்சட்டியிலவிட்டு மேற்சொல்லியகட்டியை எடுக்கவைக்கிறது. பிற்பாடு சின்ன அடுப்புப்பற்றவைத்து ஒருமண் ஓட்டிற்குத் துவாரமிட்டு காசிக்குப்பியின் ஓட்டினால் மண் ஓட்டுத்துவாரத்தை யடைத்து ஓரத்தில் சீலையணசெய்து மேற்சொல்லிய கட்டியை அதன்மேல்வைத்து குசியில் துவளிசுற்றி அந்தரசத்தில் துவைத்துக்கட்டியைப்புரட்டிப் புரட்டிச் சுருக்குக்கொடுக்கிறது. சார ஆகிறவரையில் கட்டி

கருகாமல் கொடுக்கிறது. பிறகு ஒருசேர் இளநீர்சலம் ஒரு இருப்புச்சட்டியிலவிட்டு அதில் லிங்கக்கட்டியை ஒரு நாள் ஊறவைத்து மறுநாள் அடுப்பில் வேறு ஒரு இருப்பு சட்டியைவைத்து அதில் லிங்கக்கட்டியைவைத்து முன் இளநீரால் முன் சொன்னபிரகாரம் இளநீர் எல்லாம் ஆகிறவரையில் சுருக்குக்கொடுக்கிறது. பிறகு தென்னம்பதனி சேர் (௩) வாங்கி அதில் மேற்படி கட்டியை ஒருநாள் ஊற வைத்து முன் சொன்னபடி இருப்புச்சட்டியில் மேற்படி கட்டியைவைத்து மேற்படி பதனி முடிகிறவரையில் சுருக்குக்கொடுக்க இலிங்கம் பொன்னிறமாகிக்கட்டும். இதற்கு சொர்ணலிங்கக்கட்டு என்று பேர். செய்யும் முறையிற் றவறினால் ஒரு பாதி பொன்னிறமாகவும் மறுபாதி கருப்பு நிறமாகவும் இருக்கும். ஆகையால் மிகவும் சாக்கிரதையாய்ச் செய்யவும்.

அப்புறவு,

பஞ்சலவண உப்புமுறை.

இந்துப்பு, வெடியுப்பு, கெந்தவடியுப்பு, வளையலுப்பு, கறியுப்பு, இவ்வைந்தும் வகையொன்றுக்கு விராகனெடை (௧) சவுட்டுப்பு படி (௧) இதில்இரண்டுபடி தண்ணீர்விட்டு நன்றாயப்பிசைந்துவைத்து தெளிவு எடுத்து மேற்சொல்லிய உப்புகளைப்போட்டு செவ்வீரம் விராகனெடை (௧) அன்னபேதி விராகனெடை (௨) சவுக்காரம் விராகனெடை (௨) இம்மூன்றும் அந்தத்தண்ணீரிற்போட்டு அந்தச்சட்டியைச் சூரியபுடத்தில்வைத்துவந்தால் சலம்சுவறி உப்பாகும். இதற்குப் பஞ்சலவண உப்பு என்று பெயர்.

அப்புறவு,

இலிங்கக்கட்டு.

சுத்திசெய்தலிங்கம் விராகனெடை (௫) கோழிமுட்டைக்குமேலே சிறு துவாரஞ்செய்து அதில் இந்த லிங்கத்தைச் செலுத்தி முட்டைவாய்க்கு உளுந்துமாவினால் கவசஞ்செய்து கால்படி புழுங்கலரிசி வடிக்கிறபாண்டத்தில் சாதம்

ஒரு கொதிவருகிறசமயத்தில் மேற்படிமுட்டையை அதில் வைத்து சாதம் பக்குவமானவுடன் இறக்கி ஆறினபிறகு அந்த முட்டையை யெடுத்துக்கொள்ளுகிறது. இவ்விதமாய (௩௨ம) முட்டையில் பக்குவஞ்செய்தால் லிங்கம் கட்டுப்பட்டுப்போம். இந்த லிங்கத்தை சமையோசிதமாய்த்தக்க அனுபானத்தில் உட்கொண்டால் தாதுவிர்த்தி, இரத்தவிர்த்தி, பசிதீபனம் முதலியவை உண்டாம்; வியாதிகள் ஒன்றும் வராது.

அப்புராவு,

ஆநந்தபயிரவ மாத்திரை.

இரசம் விராகனெடை (௧) நெல்லிக்காய் கெந்தகம் விராகனெடை (௧) இலிங்கம் விராகனெடை (௧) கருநாவி விராகனெடை (௧) வெண்காரம் விராகனெடை (௧) இவைகளை சுத்திசெய்து கல்வத்தில் இரண்டுசாமம் எலுமிச்சம்பழச்சாற்றால் அரைத்துப் பிறகு இஞ்சிரசத்தினுலிரண்டுசாமம் அரைத்து மிளகுப்பிரமாணம் உருண்டைசெய்து நிழலிலுலர்த்தி ஒருமண்டலம் வேப்பமரப்பட்டையிலவைத்து தானியபுடம்வைத்து எடுத்துக்கொள்ளவும்.

(இதனால் தீரும் வியாதிகள்.)

சுரம், சன்னிபாதசுரம், வாதரோகம், குன்மவாய்வு, சோணி, பாலகருக்குக்காணும் மாந்தரோகங்கள் ஆகியவை தீரும்.

சிவநாம இரசம்.

கருநாவி, ரசம், நெல்லிக்காய் கெந்தகம், திப்பிலி, இலிங்கம், வெங்காரம், மனோசிலை, சுக்கு. இந்த எட்டும் வகையொன்றுக்குவிராகனெடை (௧) மிளகுத்தூள்விராகனெடை (௮) இவைகளெல்லாவற்றையும் ஏழுநாள் கருப்பாகிறவளையில் அரைத்து எடுத்துக்கொள்ளுகிறது. இது வாதரோகம் (௮ம்) சிலேற்பனரோகம் (௯௬) சுரம், சயித்தியம், சன்னி, பாம்புகடி, தேள்கொட்டு, ஆகிய இவைகளுக்கெல்லாம் உபயோகப்படும்.

அம்பலவாணபிள்ளை,

அக்கினிகுமார சிந்தூரம்.

குதிரைலாடத்தை நன்றாய்க்காய்ச்சி, சாணிப்பாலில் துவைத்து எடுத்துஇராவிண அரபொடி சேர் (க) இதை இரண்டு நாள காடியில ஊறபபோட்டுப பின்பு எலுமிச்சம்பழரசததில் ஊறவைதது எடுத்தது (௩௨) விராகனெடை, காங்தம கொளளுத்தண்ணீரில் டோளாநதிரங்கட்டிக கொதிககவைததுசசுததிசெயதது விராகனெடை (௰௬) நெல்லிக்காய்கெந்தகம விராகனெடை (அ) ரசத்தை செஙகல்தூளுடன் சோததரைதது ஊதி பிறகு மஞசளதூளுடன் சோததரைதது ஊதினரசத்தை யெடுத்து வடிகட்டிககொள்ளுகிறது. இவவிதமாகசசெயத ரசம விராகனெடை (ச) மனோசிலை விராகனெடை (உ) மேறசொல்லியவகை ஐநதுங்கறறாழைச்சார்விட்டு எட்டுசாமம அரைககிறது. செம்முள்ளி ரசம விட்டு இரணடு சாமம, குபபமேனிசசாவிட்டு இரண்டு சாமம, வெறறிலைசசாவிட்டு இரண்டு சாமம், உத்தாமணிச்சார்விட்டு நாலுசாமம, கொடிவேலிக்கஷாயத்தினல் நாலு சாமம், அரைசசேர் சுககுக் கிஷாயத்தில நாலுசாமம, மருதமபட்டைககஷாயததில் நாலுசாமம, நாவறபட்டை கஷாயத்தில் நாலுசாமம, கொமபுப்பாகை ரசததில நாலுசாமம, முருஙகையிலைசசாற்றில நாலுசாமம் அரைதது, ஓரே விலலையாகததட்டி நாகப்பட்டையை இடிதது ஒரு சட்டியில் கொஞ்சமபோட்டு அதறகுமேல அந்தவில்லையை வைத்து அதன்மேலும இந்தத தூளைபபோட்டு மேல் சட்டிமூடி (ச) சீலைமண்செய்து (௩௰) சாமம கிரமமாயத தீபபோட்டால் சிநதூரமாகிறது. இன்னமொருபாகமுஞ் செய்யலாம. மேறபடி சிநதூரத்தையே மடக்கி மடக்கி கறறாழைசசோற்றிலரைத்து ஆறுதடவை கெஜபுடம போட்டால் அதிக வீரியமாயிருக்கும. ஆயிரம் விதமான வியாதிகளுககுககொடுக்கலாம.

அப்புராவு,

மேகத்தெண்ணெய.

சகலகணத்துக்கும் உஷ்ணரோகத்துக்கும் கொடுக்கலாம்.

கொட்டை முந்தெண்ணெய சேர் (௰) கற்றாழைச்சமூலம இடித்தசார் சேர் (௰௨) முடக்கொற்றான்சாறு சேர் (௮) பிரமியவழுக்கைச்சாறு சேர் (௮) பொன்னாங்காணிச்சாறு சேர் (௫) கையாந்தகரைச்சாறு சேர் (௯) வில்வஇலைச்சாறு சேர் (௬) வெங்காயச்சாறு சேர் (௫) எலுமிச்சம்பழச்சாறு சேர் (௫) பசுவின்பால சேர் (௪) வல்லாரைச்சார் சேர் (௬) மணித்தக்காளியிலைச்சாறு சேர் (௬) சிறு செருப்படியிலைச்சாறு சேர் (௯) வெந்தயம சேர் (அரைக்கால) கிராம்பு சேர் (அரைக்கால) இவைகளில ஒருநாளொன்றுக்கு ஆகப்பட்ட வரையில இரண்டுவகை மூன்றுவகை ரசம்விட்டுக்குழம்புப பதமாக எரித்து எடுத்துவைக்கிறது. இந்தப்பிரகாரம எட்டுநாள்செய்து மேற்சொல்லிய வெந்தயம வறுத்துத் தூள செய்துபோடுகிறது. கிராம்பு அரைத்துச சேர்க்கிறது. கமலாக்கினியாயெரித்து மெழுகுபதத்தில வடித்துக்கொள்ளுகிறது. சகலமான உஷ்ணத்துக்குக் கொடுக்கலாம.

அப்புராவு,

மேகத்தெண்ணெய. வேறு.

கற்றாழைச்சருகு இடித்தத் தூளசெய்து தெள்ளினது சேர் (௧) பொற்றலைக்கையாந்தகரையைக் காயவைத்து இடித்தத்தூள சேர் (௧) அவுரியிலையைக் காயவைத்து இடித்தத் தெள்ளினது சேர் (௧) வல்லாரையிலைத்தூள் சேர் (௧) கருப்புக்காக்கரட்டான் சமூலமும் கொஞ்சம வேருஞ்சேர்த்து இடித்து தூள்செய்து தெள்ளினது சேர் (௧) வெள்ளைக்காக்கரட்டான் சமூலமும கொஞ்சம வேருஞ்சேர்த்து இடித்துத் தெள்ளியது சேர் (௧) பூண்டுசேர் காலே அரைக்கால, மிளகு சேர் காலே அரைக்கால், இவைகளெல்லாவற்றை

யும் அம்மியில்வைத்துக் கற்றாழைச்சாற்றினால் ஐந்துநாழிகையரைத்துச் சந்தன விலலைபோல்செய்து காயவைத்து ஒருசேர் கொட்டைமுத்தெண்ணெய்க்கு மேற்படி வில்லையில் சேர் (௨) போட்டு (௰௫) நாள் சூரியபுடம் வைத்து எடுக்கத்தைலம் பக்குவமாகும்.

மேற்படி எண்ணெய்கொடுக்கிற விபரம்.

ஒருநாளொன்றுக்குக் கால்சேர் விழுக்காடுகொடுக்கலாம். மூன்றுநாளைக்கு மேற்படி யெண்ணெய் தேகத்தில் ஊறும்படியாக இருந்தால் தினம் சுத்தெண்ணெயாகச் சாப்பிடலாம். உப்பில்லாபத்தியமாக இருக்கலாம். இச்சாபத்தியமாகவுமிருக்கலாம். இதனால் சகல உஷ்ணரோகங்கள், வாதரோகம், மதுமேகம், சகலமேகங்கள் பக்ஷவாதம், வாயுகள் கருப்பஸ்திரீ வியாதிகள், வண்டுகடிகள், இரத்தபிரமியரோகங்கள், வெட்டை, சூலைக்கட்டு, இரணங்கள், இவை முதலியவைபோம்.

இலிங்கக்கட்டு

இலிங்கம் ஒரேகட்டியாய விராகனெடை (௰) முலைப்பாலில் சுத்திசெய்து ஒரு ஓட்டில்வைத்து கீழ்மேத்திப்போட்டு புளியிலைச்சாறு சேர் (௧) துரிஞ்சிப்பழச்சாறு சேர் (௧) புளியாரைச்சாறு சேர் (௧) நாரத்தங்காய்ச்சாறு சேர் (௧) சீமைக்காயிலைச்சார் சேர் (௧) கடாரநாரத்தம்பழச்சாறு சேர் (௧) எலுமிச்சம்பழச்சார் சேர் (௧) கொடியெலுமிச்சம்பழச்சாறு சேர் (௧) நெல்லிக்காய்ச்சாறு சேர் (௧) வன்னிப்பட்டைச்சார் சேர் (௧) தமரத்தம்பழச்சாறு சேர் (௧) கருவேலம்பட்டைச்சாறு சேர் (௧) மாதுளம்பழச்சாறு சேர் (௧) குச்சுத்தம்பத்தை அல்லது அமுக்குரா அல்லது புளிமாங்காய் அல்லது பெல்லம்புசார் சேர் (௧) செம்பருத்திப்பூச்சாறு சேர் (௧) கொம்பு கஷாயஞ்சேர் (௧) மேற்சொல்லிய (௰௬) வகைகளினால் சுருக்குக்கொடுத்தால் இலிங்கங்கெட்டியாம் இந்த லிங்கம் சகலரோகத்துக்குங் கொடுக்கலாம்.

௲ வாட்டாத்துகியானியார,
இலிங்கக்கட்டு,

வெள்ளைப்பூண்டை மெலலிதாக அரைததுத துணியில் தடவி வத்திபோலசுருட்டி அனலில வாட்டிப்பிழிநதால தைலம்வரும; இந்தத்தைலம சேர (க) லிஙககட்டி பலம க - க்கு சுருக்குக்கொடுக்க லிஙகங்கட்டுப்படும. சகலவா தரோகங்களுக்கும கொடுக்கலாம.

பாப்புவைத்தியா.
மன்மத சிந்தாமணி லேகியம்

சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய, தானறிக்காய, நெலலி முள்ளி, சாதிக்காய, சாதிபததிரி, கிராமபு, தீசாலாம, சீரகம, சோம்பு, கசகசா, சிறுநாகப்பூ, பறஙகிப்பட்டை, வகைக்கு சேர் (க) மலலி, கோஷ்டம, கண்டதிப்பிலி, அதிமதுரம. சனனலவஙகப்பட்டை, துளசி, குருசாணி யோமம, கடலைப்பருப்பு வகைக்குசேர (வ) உளுந்தம்பரு ப்பு சேர (வ) குசசிசிராயிததா, சிறுதேக்கு, காட்டுக்கிரா ம்பு, சாலாமிஸ்ரி, மயிதாலக்கடி, றாமிமஸ்தகி, இகுபகோல விதை, சமுத்திராஜோகி, வாதாமபருப்பு, ஏலம, குஙகும பபூ, திராக்ஷப்பழம, கூகைநீா, நறுவளிவிரை, பூனைக்கா லிவிதை, நெருஞசிமுள்ளு, ஆடாதோடைவிதை, பூலா விதை, முருங்கைவிதை, பொனமுசுட்டைவிதை, நாயுரு விவிதை, நத்தைசசூரிவிதை, தேறறுளவிதை, கரிப்பயிறு மவிதை, நாயுருவிவிதை, துததிவிதை, வானகவிதை, கை யாநதகரைவிதை, ஊமத்தைவிதை, நாயவேளைவிதை, கண டங்கத்திரிவிதை, துளசிவிதை, பொடுதலைவிதை, சாரப பருப்பு, நாகப்பூ, தாதுவளை, வெநதயம, சிறறரததை பறபாடகம, கஸ்தூரிமஞசள, காட்டுமஞசள, கஞ்சாங கோரை, உலாததின ஆலநதுளிா, அல்லிக்கிழங்கு, கொட் டிக்கிழங்கு, கொண்டை சீனிக்கிழங்கு, நிலப்பனைக்கிழ ங்கு, அமுக்கராக்கிழங்கு, தண்ணீர்விட்டான்கிழங்கு, செங கழுநீர்க்கிழங்கு இக்கிழங்கு வகைகளெல்லாவற்றையும

காயவைதது வற்றலசெய்து வகைக்குப்பலம (ற) கடைச சரக்குகள் வகைக்குபபலம (ற) இவவிரணடுவகைகளையும சேர்தது இடித்து வஸ்திரகாயஞ்செயது கொள்ளவும. சீநில் சருககரை பலம் (ற) சுத்திசெயத வெள்ளைககுங்கிலியம் பலம (ற) ஆலம்பால, அத்திபபால், இசசிப்பால, ஒதியமபால், பிரமபால், செவ்வகததிப்பூசசார, பரித்திபபிஞ்சுசார், ஆவாரமபூச்சார, வகைககுபபலம (ற) இவறறையும மேற்படி சூரணத்துடன் சேர்ததுக் காயவைத்து மறுபடியும இடித்து வஸதிரகாயஞ்செய்து கொள்ளவேண்டும. மதனகாமேஸ்வரபபூ விராகனெடை (ற) அபின விராகனெடை (ற) இவற்றையும மேறபடி சூரணததில் சேரதது சேலம சருககரை சேர (சு) - ல ஒருபடி தணணீரவிடடுக கரைத்து வடிகட்டிப பாகுசெயது அதில மேறபடி சூரணஙகள் எலலாஙகலநது மூன்று விராகனெடை குஞசாசெய, பசுவினசெய சேர் (௩) தேன சேர் (உ) இவற்றையும லேகியததில கலந்து பககுவமாய லேகியஞ்செயது கொளளவும. வேளை ஒனறுககு கழறசிககாயளவாக இரணடு வேளையும உடகொளக.

இந்தமன்மத சிந்தாமணி லேகியத்திஞல
சுவஸ்தமாகும் வியாதிகள்.

(அச) வாதம. வாதமேகம, பித்தமேகம, தந்திமேகம, சீழபபிரமியம, இரததபபிரமியம, மூததிரகிரிச்சரம, கிராணி, யோனிசூலை, அஸ்திகததோஷம, அஸ்திசுரம, எலும்புருககிதோஷம, தாதுநஷடம. தேகம இளைத்தல, தேகககிறமமாறல், முதலியவைகளாம. இசசாப்பததியம.

பாப்பு வைததியா,
மன்மதசிந்தாமணி திருத்தி.

முன்னெழுதிய மன்மதசிந்தாமணி லேகியத்தில் சருககரை, தேன், செய, இவைதவிற மற்ற சாமானகள், கிழங்குகள், பால் இவைகளெல்லாம சேரத்து இடித்து ஒரு பாத்திரத்தில் போட்டு ஆறறுசலம் இந்த சாமான்களுககு

மேல ஒரு சாண் சலம நிற்கும்படியாக ஊறறி அறுபது நாழிகை யூறவைததுப் பிறகு மறுபானையில ஊறறி அந்தப பானைவாயில் வாலைவைத்ததிருத்தியிறக்கி அநதத்திராவகத்துடன கொடிமுநதிரிபபழம, பேரிசசமபழம, கொளிஞ்சிபபழம, நாரத்தமபழம், எலுமிசசமபழம, துரிஞசிப்பழம, மாதுளமபழம, தமரத்தமபழம, அததிபபழம, இலநதைபபழம, நருவுளிபபழம, விளாமபழம, பாலைபபழம, கமபளிபபூசசிபபழம, கோசிபபழம, அறுசிபபழம, ரஸதாளிப்பழம, பசசைநாடமபழம, கொயயாபபழம, சனனககருமபு, நாணறகருமபு. இவைகளெலலாம வகை யொன்றுக்கு காலசசோசாற றெடுதது முன்திருத்தியில் சோத்து இரண்டாந்தடவையும முறைபபடி திருததியிறககி சீசாவில பததிரபபடுததவும வேளையொனறுககு இரணடு விராகனெடையாக இரணடுவேளையும பானஞ்செயயலாம. முன கண்ட வியாதிகள தீரும. இசசாபததியம.

வாடடாத்துகியானியாா.

அடிகாயப்பற்று.

வாகுபடி (வ) கேழவரகு படி (வ) இவவிரண்டையும வறுததும, கரியபோளம பலம (க) காசிக்கட்டி பலம (க) கார்போக அரிசி பலம (௭) கடுககாய பலம (க) கஸிபபாககுபலம் (க) குக்கில் பலம (க) இவற்றைத்தூள் செயதும சோத்துப் பாலைபபட்டை கஷாயத்திலல சேக அரைத்து எலுமிசசம்பழஞசாறறிற கலநது பறறுபபோட அடிபட்ட வீககம, இரததககட்டு, அதனுலுணடான சோது, வலி இவைகளெல்லாம சொஸ்தமாகும.

கியானியாா.

வாதராட்சஸ மாத்திரை.

இரசம் சோ அரையே அரைககால் கருஞசீ சோ (வ) வெண்காரமசோ (வ) கெநதகஞ்சோ் (க) மிளகுசோ தூலிலை அரைக்கால், மஞ்சிலை சேர் அரைக்கால், அயபஸ்பம சேர் அரையே அரைககால, லிஙகம்சேர் (வ) காசிக்கட்டிசோ

அரைககால், இந்த ஒன்பது சரகளையும கல்வத்திற்போட்டுக் கொடிவேலிககஷாயத்தினால் அலலது காட்டாமணக்குபபாலினால் (௰உ) சாமம அரைத்து அதை வில்லைசெயது தாளிசசட்டியில் மணறபோட்டு அடுபபில்வைதது அந்த மணலின்மேல் கிளிஞ்சில்வைதது அதில் வில்லைவைத்து எரிதது எடுத்துககொள்ளவும தக்க அனுபானததிறகொடுகக வாயு, முதலியவை தீரும.

கியானியார்,

இராஜ பூபதி மாத்திரை.

அயபஸபம, ரசம, கெநதகம, மிளகு, கருஞ்சீரகம், இவை வகையொன்றுககுச சோ காலேஅரைககால், தாளகமசேர (காலேஅரைககால) இந்த ஆறுவகையுஞ்சோதது பெருஞ் செருபபடிசசாறவிட்டு எட்டுசசாமம அரைதது இஞ்சிச சாறறில எட்டுசாமம அரைதது வில்லைதட்டி உலர்ததி வாலுகாயந்திரததில வைத்து எரிததுபபாகமாய் மாத்திரை செயது வாதசுரம, பிததசுரம, சன்னி, தோஷம ஆகிய ரோகஙகளுககு அனுபான விசேஷஙகளிற கொடுககலாம.

கியானியார,

சிந்தாமணி மாத்திரை

அயசிந்தூரம, நிமிளை சிந்தூரம, ரசசிந்தூரம, காரியசிந்தூரம இவை வகை - க - ககு சோ காலே அரைக்கால்) ரசகறபூரம் சோ (வ) மனோசிலை சோ (வ) காந்தம், சூரசா, தாளகம, இந்த மூன்றுஞ்சும உருககினது பலம (க) லிஙகம சோ ஒணணே முக்காலே பணாககால் இவைகளெல்லாவற்றையும கொடிவேலிககஷாயததினால் (௰உ) சாமம அ[illegible]து வில்லைதட்டிக்காயவைத்து கருஙகோழிமுட்டை [illegible] [illegible]து வாலுகா யநதிரததில் எரித்துப் பதமா [illegible]துகொளளவும. சுரம், தோஷம், சன்னி, சயம, [illegible] இவைகளுககெல்லாம தக்க அனுபானத்திற் கொடுபபது.

இயானியார்,

குன்மக்குடோரி மாத்திரை.

அத்திராகம் பலம் (க) உருக்கி அதில் மனோசிலைத்தூள் பலம் (க) போட்டு குழஞ்சிவேரினால் புரட்டிக்கொடுத்தால் நல்ல பஸ்பமாகும். அந்தப்பஸ்பத்துடன் செவ்வீரம் பலம் (க) லிங்கம் பலம் (க) ரசம் பலம் (க) கெந்தகம் பலம் (க) விடத்தலைவேர்ப்பட்டை பலம் (க) இவைகளெல்லாவற்றையும் எலுமிச்சம்பழச்சாற்றால் ஆறுஜாமம் அரைத்து வில்லைசெய்து உலர்த்திவாலுகாயந்திரத்தில் வைத்து எரித்துக்கைமுறையாக எடுத்துத் தக்க அநுபானத்தில் கொடுக்க அஷ்டகுன்மம், வாயு முதலியவைதீரும்.

கியானியார்,

இலிங்கங்கட்டு.

